**திருநெல்வேலி மாவட்டத்திற்கான வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கை**
**(ஜனவரி 13-ம் தேதி முதல் ஜனவரி 17-ம் தேதி வரை)**
**(வெளியீடு: வேளாண் வானிலை ஆலோசனை மையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்,**
**தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவில்பட்டி மற்றும் இந்திய வானிலை துறை)**

**முந்தைய வார வானிலை (8.1.16- 11.1.16)**

| | |
|---|---|
| மழை (மி.மீ.) | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 30- 32 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 23- 24 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 3- 6 |
| ஒப்புஈரப்பதம் (08:30 மணி) (சதவீதம்) | 72- 83 |
| ஒப்புஈரப்பதம் (17:30 மணி) (சதவீதம்) | 59- 65 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) | 0- 2 |
| காற்றின் திசை (டிகிரி) | 0- 140 |

**17.1.16 அன்று 08:30 மணியுடன் முடிவடையும் காலத்திற்கான வானிலை முன்னறிவிப்பு**

| வானிலை காரணிகள் | வானிலை முன்னறிவிப்பு | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1<br>13.1.16 | நாள் 2<br>14.1.16 | நாள் 3<br>15.1.16 | நாள் 4<br>16.1.16 | நாள் 5<br>17.1.16 |
| மழை (மி.மீ.) | 0 | 0 | 0 | 0 | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 32 | 32 | 32 | 32 | 32 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 23 | 23 | 23 | 23 | 23 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 4 | 4 | 4 | 4 | 4 |
| ஒப்புஈரப்பதம் (சதவீதம்) | 62- 76 | 62- 76 | 62 -76 | 62- 76 | 62- 76 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) மற்றும் திசை | 2/ தென்கிழக்கு | 2/ தென்கிழக்கு | 2/ தென்கிழக்கு | 2/ தென்கிழக்கு | 2/ தென்கிழக்கு |

**வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் மிதமான மேகமூட்டம் மற்றும் ஈரப்பதம் கொண்ட வானிலைக்கேற்ற வேளாண் வானிலை ஆலோசனைகள்**

| பயிர் / சாகுபடி சூழல் | பருவம் / சாகுபடி செயல்கள் | வேளாண் வானிலை ஆலோசனைகள் |
|---|---|---|
| நெல் | மணி திரட்சியடையும் பருவம் | நெல்லில் மணி திரட்சியடையும் பருவம் முக்கியமான பருவமாதலால் ஏற்கனவே கட்டிய நீர் மறைந்த பிறகு 5 செ.மீ. உயரத்திற்கு மீண்டும் நீர்ப்பாசனம் செய்யவும். |
| சோளம் | முதிர்ச்சி பருவம் | வரும் தினங்களில் வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் முதிர்ச்சியடைந்த சோளத்தை அறுவடை செய்யவும். அறுவடை செய்தவுடன் வயலை உழவு செய்வதன்மூலம் தண்டுத்துளைப்பானின் கூட்டுப்புழுக்களையும் களைகளையும் அழிக்கலாம். |

| | | |
|---|---|---|
| மக்காச்சோளம் | முதிர்ச்சி பருவம் | வரும் தினங்களில் வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் முதிர்ச்சியடைந்த மக்காச்சோள கதிர்களை அறுவடை செய்து வெயிலில் உலர்த்தி கதிர் அடிக்கும் இயந்திரத்தை கொண்டு மணிகளை பிரிக்கவும் அல்லது கம்பைன் அறுவடை இயந்திரத்தை பயன்படுத்தி அறுவடை செய்யவும். மணிகளை தூற்றி சணல் பையில் சேமிக்கவும். |
| பருத்தி | பூக்கும் மற்றும் காய்க்கும் பருவம் | தற்போது நிலவும் வானிலையில் பருத்தியில் மாவுப்பூச்சியின் தாக்குதல் தென்படுகிறது. செடியில் பாதிக்கப்பட்ட பகுதிகளை அகற்றி அழிக்கவும் அல்லது தாக்குதலின் தீவிரத்தை கருத்தில்கொண்டு குளோர்பைரிபாஸ் 2 மி.லி./ லி என்ற அளவில் தெளிக்கவும்.<br><br>தற்போது நிலவும் வானிலையில் பருத்தியில் காய் புழுக்களின் தாக்குதல் தென்படுகிறது. இப்பூச்சியின் தாக்குதலை கண்காணிக்க விளக்குப்பொறி அல்லது இனக்கவர்ச்சி பொறிகளை பயன்படுத்தவும். இப்பூச்சியின் முட்டைகளை அழிக்க டிரைக்கோகிரம்மா முட்டை ஒட்டுண்ணியை 6.25 கன செ.மீ./ எக்டர் என்ற அளவில் பயன்படுத்தவும் அல்லது *ஹெலிகோவெர்பா ஆர்மிஜெரா* என்.பி.வி. கரைசல் 400- 600 மி.லி./ எக்டர் என்ற அளவில் தெளிக்கவும் அல்லது தாக்குதலின் தீவிரத்தை கருத்தில்கொண்டு குளோர்பைரிபாஸ் 2 மி.லி./ எக்டர் அல்லது குளோரான்டிரனிலிபுரோல் 150 மி.லி./ எக்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| மிளகாய் | பூக்கும் பருவம் | மிளகாயில் இது பூக்கள் அதிகம் உருவாகும் சமயமாதலால் துரிதமான பயிர் வளர்ச்சியின் தேவையை ஈடுகட்ட தழைச்சத்து 25 கிலோ/ எக்டர் (யூரியா 55 கிலோ/ எக்டர்) என்ற அளவில் இட்டு மண் அணைக்கவும்.<br>சாதகமற்ற மண் மற்றும் சுற்றுக்சூழல் காரணிகள், வளர்ச்சி ஊக்கிகள் குறைபாடு, பூச்சி மற்றும் நோய் தாக்குதல் ஆகியவை மிளகாயில் பூக்கள் உதிர காரணமாக உள்ளன. எனவே காய்ப்பிடித்தலை மேம்படுத்த என்.ஏ.ஏ. (NAA) என்ற வளர்ச்சி ஊக்கியை 10 மில்லி கிராம்/ லிட்டர் என்ற அளவிலும் (4.5 லிட்டர் தண்ணீருக்கு வணிகப்பொருளான பிளானோபிக்ஸ் 1 மில்லி லிட்டர்) மற்றும் டிரையாகான்டனால் என்ற வளர்ச்சி ஊக்கியை 1.25 மில்லி கிராம்/ லிட்டர் என்ற அளவிலும் நட்ட 90ம் நாளில் தெளிக்கவும். |

| | | |
|---|---|---|
| | | தற்பொழுது நிலவும் வானிலையில் மிளகாயில் மஞ்சள் முரணை சிலந்தியின் தாக்குதல் காணப்படுகிறது. தாக்குதலின் தீவிரத்தை கருத்தில்கொண்டு எத்தியான் 2 மி.லி./ லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |

குறுஞ்செய்தி-: மழை இல்லை. பருத்தி: காய் புழுக்களை கண்காணிக்க இனக்கவர்ச்சி பொறி அமைக்கவும். குளோரான்டிரனிலிபுரோல் 150 மி.லி./ எக்டர் என்ற அளவில் தெளிக்கவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்
கோவில்பட்டி